International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தி. ஜானகிராமன் சிறுகதைகளில் குழந்தைகள்

**பா. அய்யாசாமி**
முனைவர் பட்டஆய்வாளர்

**முனைவர் துரை. கார்த்திகேயன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லுரி, மயிலாடுதுறை-609 001

**முன்னுரை**

அவ்வையார், கொன்றைவேந்தன் ஆகியோரின் ஆத்திச்சூடிகள் ஆரம்ப காலத்தில் குழந்தைகளைப் பண்படுத்துவதற்காக பெரும் உதவி செய்தனர். தாயுள்ளத்தோடு குழந்தைகள் மனதில் உயிரெழுத்துக்கள் மூலம் அறத்தை விதைத்த முதாட்டி அவ்வையார். பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து குழந்தைகள் இலக்கியமாக அடையாளம் காணப்பட்ட விசித்திரக் கதைகள். வாய்வழி பாடல்கள் போன்ற பாரம்பரியக் கதைகளில் குழந்தை இலக்கியம் காணப்படுகிறது. அச்சிடுதல் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு, ஆரம்பகால குழந்தைகள் இலக்கியத்தின் வளர்ச்சியைக் கண்டுபிடிப்பது கடினம். அச்சிடுதல் பரவலாக மாறிய பிறகும், பல உன்னதமான "குழந்தைகள்" கதைகள் முதலில் பெரியவர்களுக்காக உருவாக்கப் பட்டு பின்னர் இளைய பார்வையாளர்களுக்காக மாற்றியமைக்கப் பட்டன. பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து பெரும்பாலான இலக்கியங்கள் குறிப்பாக குழந்தைகளை இலக்காகக் கொண்டுள்ளன, பெரும்பாலும் ஒரு தார்மீக அல்லது மதச் செய்தியுடன் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியும் "குழந்தைகள் இலக்கியத்தின் பொற்காலம்" என்று அழைக்கப்படுகின்றன, ஏனெனில் பல உன்னதமான குழந்தைகள் புத்தகங்கள் அப்போது வெளியிடப்பட்டன. பிற்காலத்தில் அழ.வள்ளியப்பா, கு.ப அழகிரி, தி.ஜானகிராமன் போன்ற எழுத்தாளர்கள் குழந்தைகளை கதாபாத்திரங்களாக்கி நமக்கு கதைகளை வழங்கினார்கள். குழந்தைகளுக்காக இலக்கியங்கள் படைக்கப் பட்டாலும் அது எல்லோருக்கும் எல்லா காலத்திற்கும் பொருந்து பவைகளாக இருக்க காண்கிறோம். குறிப்பாக சிறுகதைகளில் குழந்தைகளை மையப்படுத்தி பல எழுத்தாளர்கள் வழங்கியிருந்தாலும் தி.ஜானகிராமனின் குழந்தைகள் இளம் வயதில் தைரியமிக்க, கருணை மிக்கவர்களாக படைத்து அதன்வழி இளம்சிறார்கள் பின்பற்றவேண்டிய பண்பு நலன்களை கோடிட்டுக்காட்டி விடுகிறார்.

**ஆய்வுச்சுருக்கம்**

குழந்தைகள் இயல்பாகவே துயச்சிந்தனையுடையவர்கள். மனத்தில் எந்த அழுக்கையும் ஏற்றாமல் அப்பழுக்கற்ற நிலையில் இருப்பவர்கள். குழந்தைகள் தவரனவற்றைக்காண்பதாலும்,கேட்பதாலும் மட்டுமே தீயவற்றைக் கற்றுக் கொள்கிறார்களே தவிர தானாக எவற்றையும் தெரிந்துக் கொள்வதில்லை. நாம் அவர்களுக்குச் சொல்லித்தருவதை விட அவர்களைக் கூர்ந்து கவனித்தால் கற்றுக்கொள்ள வேண்டியதும் பின்பற்ற வேண்டியதும் ஏராளமிருக்கும், அனால் மாசு படிந்த நம் மனம் அதை கவனிக்கத தவறுகிறது. இவ்வியல்புகள் உள்ள குழந்தைகளை தமது கதையின் ஊடே நடமாடவிட்டு அன்பும் கருணையும் இயல்பாய் இருக்கும் ஒன்று என்று காட்டுகின்றக் கதைகளை விளக்கமுறை ஆய்வு முறையில் ஆராய்கிறது இக்கட்டுரை.

**முதன்மைச் சொற்கள் :** தி.ஜா – கோர்ட் – கேஸ் – ஜட்ஜ்

**கருணை**

தி. ஜானகிராமனின் முழுத் தொகுப்பில் “**கொட்டுமேளம்**” என்ற பகுதியில் உள்ள சிலிர்ப்பு கதை

இரயில் பயணத்தில் ஒரு சிறுமி. பொறுப்பானக்குழந்தை. படிக்கும் வயதில் படிக்க முடியாமல் வீட்டு வேலைக்காகச் செல்கிறாள். இரயில் பயணத்தில் தொடங்கும் கதை இரயில்களிடம் கூட ஏற்ற தாழ்வுகள் உண்டு பயணிப்பவர்கள் மத்தியில் என்கிறார், உறவினர் வீட்டுக்கு சென்ற தன் மகனை அழைத்து கொண்டு ஊர் திரும்புகிறார் இரயிலில். அப்போது அவர் சந்திக்கும் சிறுமி அவளை பற்றியதுதான் கதை. சிறுவன் அடம் பிடித்து வாங்கும் ஆரஞ்சு பழம். குடும்ப வறுமை காரணமாக வீட்டை விட்டு பிரிந்து வேலைக்காக கல்கத்தா செல்லும் சிறுமி. கதையின் முடிவில் சிறுமி பிரிந்து செல்வது ஏதோ நம்மையே விட்டு பிரிந்து செல்வது போல் மனது கனக்கிறது. கதையின் பல இடங்களில் நடை நட்சத்திரங்களாய் மின்னுகிறது. சில இடங்களில் இடியாய் இடிக்கிறார் ஆசிரியர் தி.ஜா. இரண்டு குழந்தைகள் தாயை பிரிந்து அநாதை போன்று இருக்கின்றன என்றும் அருகில் தாயில்லை எனில் குழதைகள் அநாதை போன்று தான் என்று எழுதிருப்பது படிப்பவர் மனத்தில் வலியை கூட்டும். ஒரு குழந்தை கொஞ்ச நேரத்தில் தாயுடன் சேர போகிறது. மற்றொரு குழந்தை அதாவது சிறுமி தாயை விட்டு பிரிந்து போகிறாள். மீண்டும் அவள் எப்போது தன் தாயுடன் சேர போகிறாள். யாருக்கு தெரியும்.

சிறுமியும் சிறுவனும் சாப்பிட செல்வார்கள் அப்போது அவனுடைய சாதத்தை அக்கரையுடன் தாய்போல பிசைந்துக்கொடுப்பாள். சிறுமியை தன்னுடன் அழைத்து செல்லலாம் என்று நினைக்கும் கதை சொல்லியின் எண்ணம் ஈடேரவில்லை. நமக்கும், ஆசையாக வாங்கிய ஆரஞ்சு பழத்தை அம்மாவிடம் கொடுத்து உரித்து சாப்பிட வைத்திருந்த சிறுவன் என்ன நினைத்தானோ இரயிலை விட்டு இறங்க போகும் முன் அந்த சிறுமியிடம் கொடுத்து விடுவான். **“மரப்பாச்சி பொம்மைக்கு கை உடைந்தால் கூட குழந்தைகள் அழும்“** என்ற **கவி அப்துல் ரெஹ்மானின்** வரிகளை நினைவூட்டிச் செல்கிறது இந்த நிகழ்வு.

அவள் கல்கத்தாவுக்கு போகாமல் இருந்தால் நல்லது என்று தோன்றுகிறது. இது சரியா என்று தெரியவில்லை. அவனுடைய வாழ்க்கைப்பாடு அவனால் ஒரு ரூபாய் மட்டுமே தரமுடிகிறது. அதனையும் அவள் வாங்க மறுத்து பின்பு வாங்கி கொள்வாள். பணம் படைத்தவர்கள் ஏனோ அடுத்தவரை ஏழ்மையாக தான் வைத்துக்கொள்கிறார்கள் போல. குழந்தையின் மழலைப்பேச்சுகள் கதையில் ஓடி விளையாடுகிறது. இறுதியாக அந்த சிறுமியின் கண்களை வெளிச்சத்தில் மட்டுமே பார்க்க முடியும்.

**"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு."** (குறள் 65) குழந்தைகள் பொற்றோரின் உடலைத் தொடுவது பெற்றோருக்கு இன்பத்தை தருவதாக வும், அவர்களின் மழலை மொழியைக் கேட்பது காதிற்கு இன்பம் தருவதாகவும் கூறுகிறது குறள். இதையே ஆசிரியர் கருணை மிக்க தன் மகனை தழுவி தூக்கிய போது உண்மையான சச்சிதானந்தத்தை வாரி கட்டியணைத்து அழைத்துச் செல்வதாக முடித்திருப்பார் ஆசிரியர் தி.ஜா.

**வீரம்**

கருணை இருக்கும் இடத்தில் வீரமும் இணைந்திருப்பது சிறப்பு **“பகைவருக்கும் அருள்வாய் நன்னெஞ்சே”** என்ற மகாகவி பாரதியார் வரிகளுக்கிணங்க **"எம்டனும் நானும்"** எனும் சிறுகதையில் தி. ஜானகிராமன் அவர்கள் குழந்தை இல்லாதவர்களுக்கு எல்லோர் மேலும் ஒரு பாசம் உண்டாகும், நமக்கு குழந்தை இல்லையே என்ற ஏக்கம் அனைவர் மீதும் ஒரு பாசத்தை உண்டாக்கும். ஆனால் சிலருக்கு அதுவே ஒரு வெறுப்பை உண்டாக்கும், மற்றவர்களின் பாசத்தை உணர முடியாமல் ஆக்கும். ஏழை வியாபாரியிடம் வம்படியாக பேசி ஆத்திர மாநில புயல் நிவாரணத்திற்கு நன்கொடை எழுதி வாங்கிக் கொண்டு போகும் லட்சாதிபதியை எதிர்த்து பேச முடியாத ஒருவர் எம்டன் எனும் வீரமான குழந்தையைப் பார்த்து மகிழ்கின்றார். அவருக்கு குழந்தைகள் இல்லை, திடகாத்திரமாக இருக்கும் அவன் சடுகுடு விளையாடும் அழகை ரசித்து, அவன் மற்றொருவனிடம் கடி வாங்கினாலும், கடித்தவனை மன்னித்து விடும் நல்லவன். தொடையில் கடித்தவனை காப்பாற்ற தண்ணீரில் பாயும் எம்டன், தண்ணீரில் அடித்துக்கொண்டுப் போகிறான். அதை அருகில் இருந்து பார்த்தவர் நீச்சல் தெரியாமல், காப்பாற்ற முடியாமல் அழுது கொண்டு, நல்ல வேளை அவன் என்னைப்போல் பெரியவனாகாமல் தப்பிச்சுட்டான் போல என புலம்புவதாக ஆசிரியர் முடித்திருப்பார்.

**கருணையும், வீரமும்**

**ஓடி விளையாடு பாப்பா, - நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா,**
**கூடி விளையாடு பாப்பா, - ஒரு குழந்தையை**
**வையாதே பாப்பா.**

(பாரதியார் கவிதை)

என்கிற வரிகள் மூலம் குழந்தைகள் மனத்தில் நல்ல எண்ணங்களை விதைத்தவர் பாரதி. அவ்வழியே ஆசிரியர் தி.ஜா அவர்களும் தனது கதைகளில் படைத்துள்ளார்.

“ஒரு எட்டு வயது சிறுமியைப் பற்றிய சுவாரஸ்யமான கதை பாப்பாவுக்குப் பரிசு. பாப்பா சமர்த்துக் குழந்தை. அவள் அப்பா வெளியூர் போயிருக்கிறார், இருட்டு, ராத்திரி வேளை சப்தம் பிடிக்காது. அம்மாவும் அவளும் வேலைகளை முடித்துக்கொண்டு முற்றத்தின் பக்கத்தில் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். சுவர்க்கோழி சத்தமும், எலி கூரையைப் பிராண்டும் சத்தமும் பாப்பாவை மிரட்டுகின்றன. திடீரென்று ஓட்டு மேலே ஒரு சத்தம் கேட்கிறது பூனை மதிரி இல்லை. கன்னுக் குட்டி ஏறிவிட்டதோ என்று

நினைக்கிறது குழந்தை. தமால் என்று சத்ததோடு ஒரு ஆள் குதிக்கிறான் முற்றம் வழியாக பாப்பா சுதாரித்துக் கொள்வதற்கு முன் அம்மா வாயை இறுக மூடி கத்தியைக் காட்டி மிரட்டுகிறான். அம்மாவாயில் வேட்டித் துணியை அடைத்துக் கைகளையும் கட்டிவிடுகிறான். பக்கத்தில் படுத்திருக்கும் சிறுமியைப் பார்த்தால் அசையா மல் படுத்திருக்கிறது. அசந்த தூக்கம்!!

கண்ணோரமாக அவனை அந்தப் பெண் கவனிப்பது அவனுக்கு இருளில் தெரியவில்லை. நேரே சாமான்கள் வைக்கும் அறைக்கு உள்ளே திருடன் போய்விடுகிறான். அங்கேதான் அம்மாவு டைய பட்டுப் புடவை இரண்டும் பாப்பாவின் பட்டுப் பாவாடை இரண்டும் இருக்கின்றன. பாப்பாவுக்குப் பொறுக்கவில்லை. சட்டென்று எழுந்திருக்கிறாள். அம்மாவுடைய கலவரத்தையும் பொருட்படுத்தாமல் வாயில் விரலை வைத்தபடி சாமான் அறையை நோக்கி விரைந்து போகிறாள். அங்கே திருடன் ஒரு பெட்டியைப் பார்த்துவிட்டு இரண்டாவது பெட்டியைத் தீக்குச்சியை உரசி, திறக்க வெளிச்சம் தேடுகிறான். பாப்பா சட்டென்று ஒற்றைக் கதவைப் பட்டென்று இழுத்துச் சட்டென்று மூடி நாதாங்கியும் போட்டு விடுகிறாள். ஓடிப் போய் விசிறி எடுத்து வந்து அதன் காம்பையும் சொருகிவிட்டு வெளியே ஓடுகிறது குழந்தை. பக்கத்து வீட்டுத் தேவர் மாமாவைக் கூப்பாடு போட்டு எழுப்புகிறது. தெருவே சத்தம் கேட்டு வீட்டுக்குள் வந்து விடுகிறது. உள்ளே வச்சுப் பூட்டிட்டேன் மாமா' என்கிறது குழந்தை. எல்லொரும் சேர்ந்து அந்தத் திருடனை மிரட்டும் போது துப்பாக்கி வைத்திருப் பதாகவும் எல்லோரையும் சுட்டுவிடுவதாகவும் சொல்கிறான். நம்ம பாப்பா சாமர்த்தியமாக அவனிடம் கத்திதான் இருக்கிறது. அதை சன்னல் வழியா வெளியே போடச் சொல்லுங்கள் என்கிறது வேறு வழியில்லாமல் திருடனும் கத்தியை வெளியே எறிகிறான். பிறகு அவன் வெளியே வந்ததும் அத்தனை பேரும் சேர்ந்து அவனை அடிக்கிறார்கள். அவன் கெஞ்சிக் கண்ணீர் வடிப்பதைப் பார்த்துப் பாப்பாவுக்குப் பொறுக்க வில்லை. "விட்டுடுங்க மாமா பாவம் அவந்தான் இனிமே திருடலைன்னு சொல்றானே' என்கிறது. கூட்டத்தினர் இன்னும் ரெண்டு சார்த்தி போலீசில் ஒப்படைக்கிறார்கள். கோர்ட்கேசில் பாப்பா சாட்சி சொல்கிறது. மார்பில் கட்டிய பாவாடையும் இறுகப் பின்னிய சடையுமாகக் கோர்வையாகக் கதை சொல்லி, "எல்லாரும் சேர்ந்து அடிச்சுட்டாங்க. அதே போதும் அவனை விட்டுடலாம்'என்று வேறு பரிந்துரை செய்வதைக் கண்டு ஜட்ஜ் சிரிக்கிறார். நீதானே பாப்பா பிடிச்சுக் கொடுத்தே. தண்டனை கொடுக்கணும் என்கிறார். பாப்பாவுக்குச் சோகம் தாங்கவில்லை. அப்பாவிடம் பாப்பாவுக்கான அரசு அவார்டாக 20 ரூபாய் கொடுக்கப் படுகிறது. அதை வாங்க மறுக்கிறது பாப்பா. ஏன் எல்லோரும் அந்தத் திருடனைப் பிடிச்சு அடிச்சீங்க? அவன் கத்தி வச்சிருந்தானேம்மா. அவன்தான் அம்மாவைக் குத்தலியே. வெறுமனே பயமுறுத்தினான். அப்படியும் அவ்வளவு அடிச்சாங்க. அழுதது பாப்பா. என்ன தண்டனை கொடுப்பாங்கப்பா. இரண்டாண்டு கடுங்காவல் கொடுத்திருக்காங்க பாப்பா. என்ன செய்வாங்க. செக்கு இழுக்க வைப்பாங்க. பாவம்.! எனக்கு ஒண்ணும் வேணாம் இருபது ரூபாய் என்று தூக்கிப் போட்டது பாப்பா. அப்பா அந்தப் பணத்தை பட்டுப் பாவாடையும் சட்டையுமாக வாங்கி வந்தார். அதைப் போட்டுக் கொள்ள மறுக்கிறது. வலுக்கட்டாயமாக அம்மா அதைப்போட்டு அழகு பார்க்கிறாள். பாப்பா அதையும் அவிழ்த்துவிட்டு விசுக்கி விக்கி அழுகிறது.

**"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது.** (குறள்:68)

தன்னை விட தனது குழந்தைகள் அறிவு பெற்றிருப்பது உலகின் அணைத்து உயிர்களுக்கும் இனிமை அளிப்பது போல ஒரு ஈர நெஞ்சத்தின் கதை. ஒரே சமயத்தில் வீரத்தையும் கருணையையும் இந்த பாப்பாவின் உருவத்தில் வரவழைத்து விடுகிறார் ஆசிரியர் தி.ஜா.

**முடிவுரை**

குழந்தைகளின் உலகம் உண்மையில் மகிழ்ச்சியானது. அவர்களிடம் பொய், சூது, வன்முறை போன்ற தீய குணங்களும் எண்ணங்களும் கிடையாது. ஆனால் ஒரு குறிப்பிட்ட வயது வந்தவுடன் அனைவரும் அவ்வாறு இருப்பதில்லை. குழந்தைகள் பொதுவாக தங்களை விட வயதில் பெரியவர் களாக உள்ளவர்களின் நடத்தைகளையும் நடவடிக்கை களையும்தான் பின்பற்றுவர். ஆக, பெரியவர்கள் குழந்தைகளின் முன்நிலையில் ஒரு தவறான காரியத்தைச் செய்யும் பொழுது அதிலுள்ள நல்லது கெட்டதை அறியாமல் குழந்தைகளும் அவ்வாறே செய்ய தொடங்குவர். நாளடைவில், இதுவே அவர்களின் குணமாக அமையும் பெரியவர்கள் குழந்தைகளின் மூலம் வெளிப்படும் நற்குணங்களைப் பின்பற்றாமல் மறைமுகமான முறையில் தங்களின் தீய குணங்களைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். சில மனிதர்கள் தங்களுக் கென்று ஒரு குறிக்கோள் இல்லாமல் வாழ்வார் கள். மாறாக அவர்கள் தங்களுக்கும் சுற்றி உள்ள மற்றவர்களுக்குப் பயனளிக்கும் வாழ்க்கையை வாழ வேண்டும். அதுவே இலக்கியங்கள் குழந்தைகள் முலம் நமக்கு நாள்தோறும் வழங்கும் செய்தியாகும்.

**துணை நுற்பட்டியல்**

1. தி.ஜானகிராமன்சிறுகதைகள் முழுத்தொகுப்பு – காலச்சுவடு பதிப்பகம்- சென்னை
2. திருக்குறள் - நியுசெஞ்சுரி புக்ஹவுஸ் - சென்னை
3. பாரதியார்கவிதை – மணிவாசகர் பதிப்பகம் – சென்னை
4. ஆலாபனை – கவி கோ அப்துல் ரஹ்மான் – வெளியீடு- சென்னை